<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>10.08.2026</u>**

OS. No. 83/2015

பக்கம் –2

PW1 – வெங்கடேசன்

**<u>பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா சொத்தை கண்ணைய்யன் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். கண்ணைய்யன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு சுமார் 42 வருடத்திற்கு முன்னர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பின்பு தாவா சொத்தில் முதல் மனைவியின் வாரிசுகள் ஒரு பகுதியிலும், இரண்டாம் மனைவியின் வாரிசுகள் ஒரு பகுதியிலும் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் முதல் மனைவியின் மக்கள் வசித்து வரும் பகுதி சிதிலமடைந்துள்ள நிலையில் அதை இடித்துவிட்டு அதை கட்ட முற்படும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே ஏற்பட்டது. நானும் கண்ணைய்யனின் முதல் மனைவியின் மக்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் வசித்து வந்தோம் என்றால் சரிதான். என் அப்பா என் தாயாருக்கு ஒரு உயில் எழுதிவைத்தாகவும் அதன் அடிப்படையில் எங்களுக்கு உரிமை இருப்தாக சொல்லிதான் நாங்கள் பிரச்சனை செய்தோம் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா இடத்தில் இடித்துவிட்டு புதிதாக கட்டடம் கட்ட முற்பட்டபோது நாங்கள் சென்று பிரதிவாதியிடம் தாவா சொத்தை அப்பா என் அம்மாவிற்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னோமா என்றால் சொன்னோம். எப்போது உயில் விவரத்தை பிரதிவாதியிடம் சொன்னோம் என்றால் பிரதிவாதி வீடுகட்ட முற்படும்போது ஏற்பட்ட பிரச்சனையின்போது சொன்னோம். 2015ம் ஆண்டுதான் தாவா சொத்தில் பிரதிவாதி வீடுகட்ட முற்பட்டார் என்றும் அப்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அப்போதுதான் உயில் குறித்து நாங்கள் சொன்னோம் என்று சொன்னால் சரிதான். Ex.A4 எப்போது உருவாக்கப்பட்டது என்றால் 02.03.1973ல் உருவாக்கப்பட்டது. Ex.A4 உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் வெங்கடபதி மற்றும் தனபால். வெங்கடபதி என்பவர் எனது மாமா, தனபால் என்பவர் எனது அப்பாவின் நண்பர் ஆவார். தனபால் என் அப்பாவின் நண்பர் என்று யார் சொன்னது என்றால் என் அம்மா சொன்னார். வெங்கடபதி எங்கு வசிக்கிறார் என்றால் சென்னையில். சாட்சி வெங்கடபதி மற்றும் தனபாலை இந்த வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் ஆம். Ex.A4 உயிலை பார்க்கும்போது 1973ல் எழுதப்பட்டதுபோல் இல்லை என்றால் தவறு. Ex.A4 ஆவணத்தை பொறுத்தவரை என் தாயாருக்கோ அல்லது வேறு யாருக்கோ

தாவா சொத்தை பொறுத்தவரை எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. Ex.A3 செட்டில்மெண்ட ஆவணம்தான் என் அம்மா எனக்கு எழுதிவைத்த ஆவணம் என்றால் சரிதான். Ex.A3 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது எனக்கு படித்து சொன்னார்கள். Ex.A3 ஆவணத்தில் என் அப்பா என் அம்மாவிற்கு உயில் எழுதிவைத்தாக எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். Ex.A3 2012 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.A3 ஆவணத்தில் முதல் மனைவிக்கு கண்ணையயன் ஒதுக்கிய சொத்து விவரம் குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அப்பா கண்ணைய்யனுக்கு Ex.A3 சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். Ex.A5 பட்டா எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 1987. சர்வே எண்.60/3B(2) எனது அண்ணன் ஆலவந்தான் 1ம் வாதி பெயரிலும் என் தாயார் பெயரிலும் Ex.A5 1987ல் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். Ex.A5ல் 10ச.மீ அளவுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A5ன் அடிப்படையில்தான் என் தாயார் Ex.A3 செட்டில்மெண்ட ஆவணம் என் பெயரில் செய்தார்களா என்றால் செய்தார்கள். Ex.A5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் இல்லாமலும், Ex.A3 ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண்ணிலும்தான் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A3ல் செட்டில்மெண்ட்ல் சொத்தின் விஸ்தீரனம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். Ex.A3யில் 2–வது ஐட்டம் சொத்தின் விஸ்தீரனம் 1600 ச.அடி என்றால் சரிதான். என் அப்பா இறந்த பின்பு என் அம்மாதான் இரண்டு குடும்பத்திற்கும் சேர்த்து குடும்பதலைவியாக இருந்தார் என்றால் சரியல்ல. Ex.A6 ரசீது எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் பெறுவதற்கு சொலுத்தப்பட்ட கட்டணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா இறந்த பின்பு சுமார் 26 ஆண்டுகள் கழித்து இறப்பு சான்றிதழ் கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். Ex.A7 ஆனது என் தாயார் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் கேட்டு இணைசார்பதிவாளர் அலுவலகம் நிலை 4ல் விண்ணபிக்கப்பட்டது என்றால் சரிதான். Ex.A7ல் என் தந்தையின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. என் தந்தையின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் என் தந்தையின் இறப்பு சான்றிதழ் குறித்து எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பு சான்றிதழ் இல்லை என்று சொன்ன பின்புதான் Ex.A8 ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றால் இல்லை. Ex.A8 கடன் ஆவணத்தில் எந்த

இடத்திலும், என் அப்பா என் அம்மாவிற்கு உயில் எழுதிவைத்த விவரம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். Ex.A8 ஏறபடுத்த காரணமே என் அம்மா தாவா சொத்தில் ஒரு வில்லங்கத்தை ஏற்படுத்துவதற்காகதான் என்றால் சரியல்ல. உண்மையில் என் அப்பா என் அம்மாவிற்கு உயில் எழுதிவைத்திருந்தால் Ex.A8ல் இந்த விவரம் குறித்து சொல்லப்பட்டிருக்கும் அவ்வாறு இல்லை என்பதால்தான் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. Ex.A17 தாவா சொத்தின் ஒரு பகுதியில் நானும் என் அம்மாவும் பயன்படுத்தி வந்தோம் என்பதை காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அசல் வழக்கு 253/2009 என்ற வழக்கானது வேலாயுதம் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வேலாயுதம் எங்கள் உறவினர் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.60/3பி(2)க்கும் வேலாயுதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். என் தாயார் இந்த தாவா தாக்கல் செய்துள்ளது 1057 ச.அடிக்குதான் என்றால் சரிதான். அசல் வழக்கு 253/2009ல் என் அப்பா என் அம்மாவிற்கு உயில் எழுதிவைத்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு 253/2009ல் உயிலை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Ex.A15, வரி ரசீது இந்த தாவா தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.A14 இந்த தாவா தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.A13, Ex.A14லும் 1057 ச.அடிக்குதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A12ல் கதவு எண் குறிப்பிடாமல் குடிநீர் கட்டண கேட்பு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A10 சொத்து வரிக்கா டிமாண்ட் நோட்டீசில் கதவு எண் குறிப்பிடாமல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A11 தாவா தாக்கல் செய்யப்பட்ட பின்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.A11க்கும் கதவு எண் குறிப்பிடாமல்தான் உள்ளது என்றால் சரிதான். உண்மையில் என் அப்பா என் அம்மா பெயருக்கு உயில் எழுதிவைத்திருந்தால் அப்போதே பட்டாவில் பெயர் மாற்றம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. ஆனால் என் அம்மாவிற்கு 1973ஆம் ஆண்டு உயில் எழுதிவைத்தபோதே இந்த உயில் பற்றிய விவரம் தெரியும். சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அந்த உயில் ஆவணம் அமுலுக்கு வரவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரிதான். என் தாயார் 1ம் பிரதிவாதி நடராஜனை எதிர்த்து அசல் வழக்கு எண்.858/1992 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு 858/1992–ன் நிலை என்ன ஆனது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. அசல் வழக்கு 858/1992 வழக்கிலாவது என் தாயார் 1973ம் ஆண்டு உயில் எழுதிவைத்த

விவரத்தை சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. எப்போதும் என் தாயாரின் பெயருக்கு உயில் எழுதிவைக்காததால்தான் அசல் வழக்கு 858/1992 ல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் எனக்கும் பிரதிவாதிக்கும் என்ன உறவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்பதை மறைப்பதற்காகதான் உறவுமுறை குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவின் பெயர் கண்ணையன்தான் ஆனால் கண்ணப்பன் என்றும் அழைப்பார்கள். என் அப்பா கண்ணையன் என்கிற கண்ணப்பன் என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். என் அப்பா கண்ணையன் இறந்த பின்பு நாங்கள் மற்றும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் கூட்டு சுவாதினத்தில் இருந்துவந்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தனிக்குடும்பமாக இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. கூட்டு சுவாதினத்தில் இருக்கும்போது நான் எந்தவித பரிகாரமும் கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக நாங்களோ பிரதிவாதி தரப்போ எந்தவித பாகப்பிரிவினையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு 858/1992 வழக்கை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் கேட்டு தெரிந்துகொண்டேன். அசல் வழக்கு 858/1992ல் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யும்போது தாவா சொத்தில் அவருக்கும் பாத்தியதை உண்டு என்றும் எனது அதை மறைத்துதான் என் அம்மா இந்த தாவா தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் தவறு. அசல் வழக்கு 858/1992ல் பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஒரு பகுதியில் நாங்கள் கட்டியிருக்கும் வீட்டில் தொந்தரவு செய்யகூடாது என்று உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் ஆண்டாள் அம்மாளுக்கு தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் உரிமை இல்லாததால்தான் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்துகளுக்கு தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.60/3பி(2), 60/3சி(1). அதில் 60/3சி(1) யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஒரு சர்வே எண்ணில் ஒரு ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான். மற்றொரு சர்வே எண்ணில்தான் சிதிலமடைந்த நிலையில் ஒரு ஓட்டு வீடு இருந்த தற்போது சிமெண்ட் சீட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சிமெண்ட் சீட் போடப்பட்டுள்ள வீட்டில் தற்போது மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அந்த மின் இணைப்பு தற்போது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. சிமெண்ட் சீட் போடப்பட்டுள்ள வீட்டில்தான் தற்போது 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் இல்லை தற்போது அவரது மகன் வசித்து வருகிறார். நானும்

எனது தாயாரும் கூட்டு குடும்ப சொத்தாக உள்ள நிலையில் தாவா சொத்தை தனியாக தாவா சொத்தில் ஒரு பங்கை மோசடியாக பட்டா பெற்றுள்ளோம் என்றால் தவறு. பட்டா பொறுத்தவரை என் பெயரில் பட்டா கொடுத்தது தவறு என்று 1ம் பிரதிவாதி வருவாய் துறையில் மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. A செட்டியுல் சொத்தில் புதிய புல எண் குறித்து குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்து என்பதால் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ள உயிலின் அடிப்படையில் நாங்கள் தனிப்பட்ட முறையில் எந்த பரிகாரமும் கேட்க தகுதியற்றவர்கள் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளவிட வந்தபோது சர்வேயர் துணையுடன் வரவில்லை என்றால் சரிதான். வழக்கு மூலம் இல்லாமல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Sd/- J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.